# குடும்பத் தலைவி

# 11

அன்பிற்கினிய மகளுக்கு,

1975 ஐப் பெண்கள் விடுதலை ஆண்டாக உலகம் எங்கும் கொண்டாடினர். நீ பாடசாலையிலும் அறிந்திருப்பாய். பெண்கள் விடுதலைபற்றிக் கட்டுரை எழுதியிருப்பாய். ஆதியிலிருந்தே பெண்கள் ஆண்களுக்குக் கீழ்ப்பட்டே வாழ்ந்தார்களா? என்று தற்போது கேட்கலாம்.



பண்டைய கூட்டுச் சமுதாயத்தில் பெண்ணே தலைவியாக இருந்தாள்; ஆண் அல்ல. நாம் இன்று பெண்ணைக் குடும்பத் தலைவி என்றும் இல்லக் கிழத்தி என்றும் வாழ்க்கைத் துணைவி என்றும் கூறிய போதிலும் பெண் அடிமையாகவே இருக்கிறாள். ஆனால் அன்று, பெண்களும் ஆண்களும் குழந்தைகளும் முதியவர்களும் கொண்ட பண்டைய சமுதாயத்தில், பெண்தான் சமுதாயத் தலைவியாக இருந்தாள்.இதைத் தாய் வழிச் சமுதாயம் என்பர். இச் செய்திகள் எல்லாம் உனக்கு வியப்பாக இருக்கிறதா?

இன்று அடிமையாய் இருக்கும் பெண்ணினம் அன்று எப்படிச் சமுதாயத் தலைமைப் பாத்திரம் ஏற்றது என்பதை அறிய உனக்கு ஆர்வம் இருப்பது இயற்கையே. அன்று தாய் மூலம் மட்டுமே இன்னாரின் மகள் இவள்.

இன்னாரின் மகன் இவன் என்று வம்ச வழி நிர்ணயிக்கப்பட்டது. மேலும் தாயே குழந்தைகளைப் பெற்று வளர்த்து பெரியவர்களாக்கும் சமூகப் பொறுப்பையும் பெற்றிருந்தாள். இந்த இரு காரணங்களும் பெண்ணைச் சமுதாயத் தலைவியாக்க அன்று காரணங்களாக இருந்தன.

மிருக நிலையிலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்த காலத்தில் பிள்ளைகள் தாயைத் தொடர்ந்து வாழ்வதே இயற்கை. தற்போதும் நீ வளர்த்த பூனையைப் பார், குட்டிகளை வளர்ப்பது தாயின் பொறுப்பே. குரங்கு, கொரில்லா, சிம்பன்சிகளிலும் இவ்வாறே.

பண்டைய கூட்டுச் சமுதாய மக்கள் காய், கனி, கிழங்குகளைச் சேகரித்தும் சிறு விலங்குகள், பூச்சிகளை வேட்டையாடியும் உயிர் வாழ்ந்தனர். பின்னர் தம் வாழ்க்கைக்கு வேட்டையாடுதலே பிரதானமாகியபோது இடம் பெயர்ந்து செல்ல வேண்டியதாயிற்று. முதியவர்கள் வேட்டைக் கருவிகளைத் தயாரிக்கவும், இளைஞர்களும் யுவதிகளும் வேட்டையாடவும், குழந்தைகளும் சிறுவர்களும் காய், கனி கிழங்குகளைச் சேகரிக்கவும், முதிய பெண்கள்— தாய்மாராக – கூட்டத்தை நிர்வகிக்கவும் படிப்படியாக பால்வழியில் அமைந்த இயற்கையான வேலைப் பிரிவினை முதன் முதலில் தோன்றியது. இம்மாதிரியான வேலைப் பிரிவினைதான் மனிதனை அடிமைப்படுத்த அடித்தளமாகியது என்பதை நீயும் அறிந்துகொள்வது அவசியம்.

இத்தகைய வேலைப் பிரிவினை இன்று மேலும் வளர்ச்சி பெற்று நிலவுகிறது. அதனாலேயே பலவகை அடிமைத்தனம் மாறவில்லை. பெண்கள் குழந்தை வளர்த்தல், சமைத்தல், வீட்டைப் பார்த்தல், துணி துவைத்தல் போன்ற வேலைகளில் இருந்து விடுதலை பெறும்போதுதான் அவர்கள் அடிமைத் தளையிலிருந்து மீள முடியும். அமெரிக்கா உட்பட பல நாடுகளிலும் பெண்களின் தலையிலேயே இவ் வேலைகள் சுமத்தப்பட்டுள்ளன. அதனாலேயே பெண்கள் அங்கெல்லாம் விடுதலையடைய முடியவில்லை. சோசலிச நாடுகளில் மட்டுமே இவ்வேலைப் பிரிவினையிலிருந்து பெண்கள் விடுதலை பெற்று வருகிறார்கள். அது பற்றி விரிவாக உனக்குச் சொல்வேன்.

பெண்களே குடும்பத் தலைவராக வாழ்ந்த பண்டைச் சமுதாயத்தின் மிச்ச சொச்சங்கள் உலகின் பல பாகங்களிலும் இன்னும் நிலவுகின்றன. கண்டிச் சிங்களவர்களிடையே இன்னும் சில வழமைகள் உள்ளன. சொத்துகள் பெண்களுக்கே உரியன. ஆண்கள் அவர்களோடு வாழும் வரை மட்டுமே சொத்தில் உரிமை கிடைக்கும்.கணவன் பெயரின்றிப் பெண்கள் தமது பெயர்களையே எப்பொழுதும் எழுதுகின்றனர்.

தந்தை வழிச் சமுதாயம், தாய் வழிச் சமுதாயம் என இருவகைச் சமுதாய அமைப்புகள் உலகில் உள்ளன. இவை பற்றிய மேலும் பல உண்மைகளை நீ பின்னர் படித்துக் கொள்ளலாம். ஏங்கல்ஸ் என்பவர் எழுதிய 'குடும்பம், தனிச்சொத்து, அரசின் தோற்றம்' என்ற நூல் வீட்டிலேயே உள்ளது. படிக்க முயல்க.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

குரங்கினம் தாவர பட்சிணி. காய், கனி, கிழங்குகளையே உண்டது. அதிலிருந்து மனிதன் எப்படி மாறினான்? காய், கனி, கிழங்குகள் சில இடங்களில் கிடைக்காது போனதனாலேயே இறைச்சி, மீன் உண்ண ஆரம்பித்தான். தேவையே மனிதனை மாற்றியது.



கொரில்லா, சிம்பன்சி எல்லாம் காடுகளில் வாழவில்லை. பரந்த நிலப்பரப்பிலேயே வாழ்ந்தன. அதிக தூரம் நடந்து ஓடித்திரிய நேர்ந்ததாலேயே கால்கள் சரியாக அமைவு பெற்றன. முதுகு நிமிர்ந்தது. இவ்வாறாக அண்மைய மனித இன வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். மனித சமுதாயம் வளர்ந்தது. அதற்கு அஞ்சியே அவை காடுகளை நாடின.

ஆதி மனிதன் உடையே உடுத்தவில்லை. வெட்கம் என்பதையே அறியான். அலைந்து திரியும் காலத்தில் வெவ்வேறு சீதோஷண நிலைகளைக் கண்டான். அவற்றிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள உடைகளைத் தேடினான். இலை, தழை, மரவுரி , தோல் ஆகியவற்றை உடுத்தான். வெப்பத்திற்கு இலை, தழை; குளிருக்குத் தோல் வாய்ப்பாயிருக்குமல்லவா? இன்று பணக்காரர் உடுப்பது நாகரிகம்: அதற்காகவே உடையாகிவிட்டது. அதாவது காலுக்காகச் செருப்பு என்று இல்லாமல் செருப்புக்காகக் கால் என்று ஆகிவிட்டது.

அன்புள்ள,
அப்பா

**செ. கணேசலிங்கன்**

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| பண்டைய | - | பழங்காலத்து / புராதன / பழையகாலம் |
| கூட்டுச் சமுதாயம் | - | இணைந்து வாழும் சமுதாய முறை |
| துணைவி | - | வாழ்க்கைத் துணைவி / மனைவி |
| பரிணாம வளர்ச்சி | - | (மாறும் சூழ்நிலைக்குத் தக்கவாறு எளிய அடிப்படையான வடிவங்களிலிருந்து புதிய அமைப்பும் இயக்கமும் கொண்ட வடிவத்தை அடையும்) படிப்படியான வளர்ச்சி. |
| கொரில்லா | - | ஆபிரிக்கக் காடுகளில் காணப்படும் வால் இல்லாத பெரிய கருங்குரங்கு |
| அடித்தளம் | - | அடிப்படை |
| சோசலிசம் | - | சமதர்மம் |
| வழமை | - | வழக்கம் |
| சொத்து | - | பணமதிப்புடைய உடைமை |
| தாவர பட்சிணி | - | தாவரப் பகுதிகளை உணவாகக் கொள்ளும் உயிரினம். |
| மரவுரி | - | ஆடையாகப் பயன்படுத்திய மரப்பட்டை |

## கிரகித்தற் பயிற்சி

*1. இக்கடிதம் யாரால் யாருக்கு எழுதப்பட்டுள்ளது?*
*2. இப்பாடத்தில் குறிப்பிடப்படும் உலகெங்கும் கொண்டாடிய விழா எது? அது எப்போது தொடங்கப்பட்டது?*
*3 அன்று பெண்ணினம் எவ்வாறு சமுதாயத் தலைமைப் பாத்திரம் ஏற்றது என ஆசிரியர் கூறுகிறார்?*
*4. ஆதிமனிதனின் வாழ்க்கை முறையைக் குறிப்பிடுக.*
*5. ‘குரங்கிலிருந்து மனிதன் வந்தான்’ என்ற கூற்றிலிருந்து சிந்திக்கக் கூடிய விடயங்களை எழுதுக.*

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

செயற்பாடு 1 : பாடசாலைக்கு அண்மையிலுள்ள வைத்தியசாலை, தபால் நிலையம், புகையிரதநிலையம் அல்லது தொழிற்சாலை ஒன்றிற்கு விஜயம் செய்து அதன் நடவடிக்கைகளை தொடர்பாடலுக்கான பண்புகளை அனுசரித்து அறிக.

செயற்பாடு 2 : நகைச்சுவை நூல்கள். நகைச்சுவைத் துணுக்குகள் இரசனைக்-குரிய திரைப்படப் பாடல்கள் முதலியவற்றை தேடிப் பெற்று மகிழ்ச்சி தோன்றவும் இரசனை உணர்வு தோன்றவும் நண்பருக்கு வாசித்துக் காட்டுக.

செயற்பாடு 3 : குழுவாகச் செயற்பட்டு பற்பசை ஒன்றுக்கான விளம்பரம் ஒன்று எழுதுக.

செயற்பாடு 4 : சோடியாகச் செயற்பட்டு இயற்கைப் பாதிப்புகளால் துன்பத்துக்கு ஆளாகியிருக்கும் உமது நண்பனுக்கு ஆறுதல் கூறி கடிதம் ஒன்று எழுதுக.

# மொழிவளம்

## ▶உவமையும் உருவகமும்

**பயிற்சி**

பின்வரும் கவிதைகளில் இடம் பெறும் உவமை அணியினை இனங் கண்டு எழுதுவோம்.

1. அழகன் முருகனிடம் ஆசை வைத்தேன் - அவன்
   ஆலயத்தில் அன்புமலர் பூசை வைத்தேன்

2. தூண்டிற் புழுவினைப் போல் வெளியே
   சுடர் விளக்கினைப் போல்
   நீண்ட பொழுதாக
   என் நெஞ்சம் துடித்ததடி......

# இலக்கணம்

## ▶வேற்றுமை

**பின்வரும் சொற்களை வாசியுங்கள்.**

அம்மா , குழந்தை , உணவு

பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபை ஏற்கும் என்று ஏலவே கற்றிருக்கின்றோம். இந்த மூன்று சொற்களையும் வேற்றுமை உருபுகளைப் பயன்படுத்தி பின்வருமாறு பொருளுள்ள வாக்கியங்களாக எழுதலாம்.

★ அம்மா குழந்தைக்கு உணவு ஊட்டினாள்.
★ அம்மாவுக்குக் குழந்தை உணவு ஊட்டியது.

இவ்விரு வசனங்களிலும் கு என்ற 4 ம் வேற்றுமையின் உருபு இடம் பெறுவதைக் காணலாம்.

முதலாம் வசனத்தில் உணவு ஊட்டியவள் அம்மா. உணவைப் பெற்றுக் கொண்டவள் குழந்தை என்ற பொருள் வருகிறது.

இரண்டாவது வசனத்தில் உணவை ஊட்டியது குழந்தை, பெற்றுக் கொண்டவள் அம்மா என்ற பொருள் வருகிறது. **'கு'** என்ற வேற்றுமை உருபை ஏற்ற பெயர்ச் சொல்லே (உணவு) பெறுகிறது. அதனுடன் தொடர்புடைய எழுவாய்ப் பெயர் உணவை வழங்குகிறது.

ஒரு வாக்கியத்தில் பெயர்ச் சொல்லின் இலக்கணத் தொழிற்பாடு வேறுபடுவதனை வேற்றுமை என்பர்.

தற்கால மொழியியல் அறிஞர்கள் வேற்றுமை உருபு உணர்த்தும் பொருளின் அடிப்படையில் வேற்றுமையை அழைப்பர்.

இந்த வகுப்பில் வேற்றுமை உருபு, அது உணர்த்தும் பிரதான பொருள் ஆகியவற்றை மாத்திரம் கற்போம். அடுத்த வகுப்புக்களில் வேற்றுமை பற்றி விரிவாகக் கற்பீர்கள்.